# Jipmer cancels leave and directs all employees to be ready for contingency

**The institute issues circular after an urgent meeting was convened by Director Vir Singh Negi. Jipmer decides to constitute an emergency multi-speciality team for deployment to border sites**

The Hindu Bureau
PUDUCHERRY

Jipmer has issued a circular cancelling pre-approved leave and instructing all employees to report back for duty immediately in view of emerging national security concerns relating to the rise in India-Pakistan tensions.

The circular, which followed an urgent meeting convened by Vir Singh Negi, Jipmer Director, has also stated that no leave shall be sanctioned till further orders.

The circular stated that in view of the emerging national security concerns due to the ongoing conflict, and considering the need for institutional preparedness and continuity of essential services, the competent authority has directed that no leave shall be sanctioned till further orders, except under severe medical or emergency situations and all previously sanctioned leaves stand cancelled with immediate effect.



Jipmer convened an urgent meeting to formulate emergency measures amid the conflict along the India-Pakistan border.

"All employees are directed to report back to duty immediately. Employees who are out of station are instructed to report back to duty latest by May 13," the circular stated.

In addition to curtailing with immediate effect the first half of the summer vacation, Jipmer has directed all faculty members to report back on or before that date. "The second half of the summer vacation, scheduled to begin on May 17, is hereby cancelled," the circular said.

All medical and paramedical employees of this institute may be required to be on standby mode for deployment anywhere in India as per the directions of the Ministry of Health and Family Welfare / Government of India, to support national efforts in view of the current situation.

Accordingly, all concerned employees are advised to remain prepared for immediate deployment and extend their full cooperation.

They are directed to maintain readiness and availability, and to strictly comply with any orders on short notice, the circular stated.

The circular also warned that non-compliance with the above instructions would be viewed seriously and dealt with in accordance with the applicable rules.

**Emergency team**

Jipmer has also decided to constitute an emergency multi-speciality team for deployment to border sites in the event of an escalatory situation. The institution is also mobilising an emergency preparedness team for any local exigency, sources said.

THE TIMES OF INDIA, CHENNAI
SATURDAY, MAY 10, 2025

# Jipmer directs staff to be ready for deployment

TIMES NEWS NETWORK

**Puducherry**: Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (Jipmer) has instructed all medical and paramedical staff members to be on standby mode for deployment anywhere in India as per the directions of the Union health and family welfare ministry to support national efforts. This comes in view of national security concerns due to the ongoing India-Pakistan conflict.

The institute declared that no leave will be sanctioned till further orders except under severe emergencies. "All previously sanctioned leaves stand cancelled with immediate effect. All employees are directed to report back to duty immediately," said the circular.

Employees who are out of station are instructed to report back to duty by May 13.

இந்து தமிழ் திசை

# போர் பதற்றத்தால் ஜிப்மர் ஊழியர்களின் விடுமுறை ரத்து

## 13-ம் தேதிக்குள் பணிக்குத் திரும்ப உத்தரவு

புதுச்சேரி

நாட்டில் நிலவி வரும் போர் பதற்றம் காரணமாக, ஜிப்மர் ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்ட பொது விடுமுறை மற்றும் கோடை விடுமுறைகள் உடனடியாக ரத்து செய்யப்பட்டுள்ளது. மறு உத்தரவு வரும் வரை விடுமுறை எடுக்கக் கூடாது எனவும், 13-ம் தேதிக்குள் அனைத்து ஊழியர்களும் பணியில் சேர வேண்டும் என்றும் ஜிப்மர் நிர்வாகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பாக புதுச்சேரி ஜிப்மர் மூத்த நிர்வாக அதிகாரி ஹவா சிங் அனைத்து துறைகளுக்கும் பிறப்பித்த உத்தரவு விவரம்:

நாட்டில் நிலவி வரும் சூழலில், தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டு, நமது ஜிப்மர் நிறுவனம் தயார்நிலையில் இருக்க வேண்டும். அத்தியாவசிய சேவைகளின் தொடர்ச்சியின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

கடுமையான மருத்துவ அல்லது அவசர கால சூழ்நிலைகளைத் தவிர, மறு உத்தரவு வரும் வரை எந்த விடுப்பும் அனுமதிக்கப்படாது. முன்னர் அனுமதிக்கப்பட்ட அனைத்து விடுமுறைகளும் உடனடியாக ரத்து செய்யப்படுகின்றன. அனைத்து ஊழியர்களும் உடனடியாக பணிக்குத் திரும்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அனைத்து ஊழியர்களும் வரும் 13-ம் தேதிக்குள் பணிக்குத் திரும்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். கோடை விடுமுறையின் முதல் பாதி நாட்கள் உடன் அமலுக்கு வரும் வகையில் குறைக்கப்படுகிறது.

இதேபோல் ஜிப்மர் மருத்துவக் கல்லூரியின் அனைத்து ஆசிரியர்களும் வரும் 13-ம் தேதிக்கு முன்பாக பணிக்குத் திரும்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். வரும் 17-ம் தேதி தொடங்க திட்டமிடப்பட்ட கோடை விடுமுறையின் இரண்டாம் பாதி இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது. தற்போதைய அவசர நிலையின் போது முழுமையான செயல்பாட்டுத் தயார்நிலை மற்றும் தடையற்ற சேவை வழங்கலை உறுதி செய்வதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தற்போதைய அவசரநிலை மற்றும் தேசிய தயார்நிலையை கருத்தில் கொண்டு, துறைத் தலைவர்களுடன் ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர் சிங் நேகி தலைமையில் நேற்று மாலை அவசரக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய ஜிப்மர் இயக்குநர், எல்லையில் நிலைமை மேலும் மோசமடைந்து பெரிய அளவிலான தாக்குதல்கள் நடந்தால், மருத்துவம், அறுவை சிகிச்சை, அவசர மருத்துவம், மயக்க மருந்து, குழந்தை மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம் உள்ளிட்ட உயர் மருத்துவ குழு தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

தேவைப்படும் நேரத்தில் இவர்கள் ஜம்மு - காஷ்மீர், ராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய மாநில எல்லைகளில் உள்ள மருத்துவமனைகளுக்கு இந்திய அரசாங்கத்தால் அனுப்பப்படலாம்.

புதுச்சேரியில் கடல் வழித் தாக்குதல் ஏற்பட்டால், ஜிப்மரின் பேரிடர் குழு தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இதுபோல பல்வேறு மருத்துவ பிரிவுகளை கொண்ட அவசரகால குழு அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

### இந்தியாவில் எங்கும் பணியமர்த்தப்படுவர்

இந்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சக அறிவுறுத்தல்களின்படி, தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு ஜிப்மர் நிறுவனத்தின் அனைத்து மருத்துவ மற்றும் துணை மருத்துவ ஊழியர்களும் இந்தியாவில் எங்கும் பணியமர்த்தப்படுவார்கள். அதன்படி, சம்பந்தப்பட்ட அனைத்து ஊழியர்களும் உடனடி பணியமர்த்தலுக்குத் தயாராக இருக்க வேண்டும். முழு ஒத்துழைப்பும் தர வேண்டும் என்றும் ஜிப்மர் மூத்த நிர்வாக அதிகாரி ஹவா சிங்கின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
10.5.2025 (சனிக்கிழமை)

### போர் சூழ்நிலை காரணமாக

# ஜிப்மர் ஊழியர்களுக்கான விடுமுறை ரத்து

## உடனடியாக பணிக்கு திரும்ப உத்தரவு

புதுச்சேரி, மே.10-

போர் சூழ்நிலை நிலவுவதால் ஜிப்மர் ஊழியர்களுக்கான விடுமுறை ரத்து செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே விடுமுறையில் உள்ளவர்கள் உடனடியாக பணிக்கு திரும்ப உத்தரவிடப்பட்டுள்ளது.

### ஆபரேஷன் சிந்தூர்

பஹல்காமில் 26 சுற்றுலா பயணிகளை பயங்கரவாதிகள் சுட்டுக்கொன்றதை தொடர்ந்து பயங்கரவாதிகள் மீதான தாக்குதலை ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் இந்திய ராணுவம் தொடங்கியுள்ளது. பாகிஸ்தான் ராணுவமும் எல்லைப்பகுதியில் தாக்குதல்களை தொடங்கியுள்ளது.

இதனால் இந்தியா-பாகிஸ்தான் இடையே எந்தநேரமும் போர் வெடிக்கலாம் என்ற சூழ்நிலை நிலவுகிறது. பிரதமர் மோடி தற்போதைய நிலை தொடர்பாக மத்திய மந்திரிகள், செயலாளர்களுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகிறார்.

### விடுமுறை ரத்து

இந்தநிலையில் ஜிப்மர் ஊழியர்களின் விடுமுறைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதுதொடர்பாக ஜிப்மர் நிர்வாக அதிகாரி ஹாவாசிங் விடுத்துள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தற்போது நாட்டில் நிலவும் சூழ்நிலை, தேசிய பாதுகாப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகளின் தயார் நிலையின் அவசியம் கருதி சில உத்தரவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

### பணிக்கு திரும்ப உத்தரவு

இதன்படி, மருத்துவம் உள்ளிட்ட அவசர கால சூழ்நிலைகளை தவிர மறு உத்தரவு வரும்வரை எந்த விடுமுறையும் அனுமதிக்கப்படாது. ஏற்கனவே வழங்கப்பட்ட விடுமுறைகள் உடனடியாக ரத்து செய்யப்படுகிறது. அனைத்து ஊழியர்களும் உடனடியாகபணிக்குதிரும்ப வேண்டும்.

விடுமுறையில் சென்றவர்கள் வருகிற 13-ந்தேதிக்குள் பணிக்கு திரும்ப வேண்டும். கல்லூரி பேராசிரியர்களும் வருகிற 13-ந்தேதிக்கு முன்பாக பணிக்கு திரும்ப வேண்டும். கோடை விடுமுறையின் 2-வது பாதி வருகிற 17-ந்தேதி தொடங்க திட்டமிடப்பட்டிருந்தது. அதுவும் ரத்து செய்யப்படுகிறது.

### கடும் நடவடிக்கை

தற்போதைய நெருக்கடி நிலையில் முழு செயல்பாட்டு தயார் நிலை மற்றும் தடையற்ற சிகிச்சைக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த அறிவுறுத்தல்களை பின்பற்றாவிட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### அவசர கூட்டம்

முன்னதாக நாட்டின் அவசர நிலை மற்றும் தேசிய தயார் நிலையை கருத்தில் கொண்டு துறைத்தலைவர்களுடன், ஜிப்மர் இயக்குனர் வீர்சிங் நேகி அவசர கூட்டம் நடத்தினார். அப்போது எல்லையில் தாக்குதல் நடந்தால் மருத்துவம், அறுவை சிகிச்சை, அவசர மருத்துவம் மற்றும் உயர் மருத்துவக்குழு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் நேரத்தில் ஜம்மு-காஷ்மீர், ராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் உள்ள ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படலாம் என்று ஜிப்மர் இயக்குனர் தெரிவித்தார்.

தினமலர்
புதுச்சேரி | சனி | 10.5.2025

# புற நோயாளி சிகிச்சை பிரிவு ஜிப்மரில் 12ம் தேதி இயங்காது

**புதுச்சேரி, மே 10–**

புத்த பூர்ணிமாவை முன்னிட்டு, நாளை மறு நாள் 12ம் தேதி ஜிப்மர் புற நோயாளிகள் சிகிச்சை பிரிவு இயங்காது.

ஜிப்மர் மருத்துவமனை இயக்குனர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

மத்திய அரசு விடுமுறை தினமாக புத்த பூர்ணிமா முன்னிட்டு, நாளை மறுநாள் 12ம் தேதி, ஜிப்மர் வெளிப்புற நோயாளி பிரிவுகள் இயங்காது. அதனால், நோயாளிகள் அன்றைய தினம் மருத்துவமனைக்கு வருவதை தவிர்க்கவும். அவசரப் பிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம் போல இயங்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினமலர்
புதுச்சேரி | சனி | 10.5.2025

# ஜிப்மர் மருத்துவர்கள் ஊழியர்களின் விடுமுறை ரத்து

புதுச்சேரி, மே 10–

புதுச்சேரி ஜிப்மரில் தற்போதைய அவசர நிலையை கருத்தில் கொண்டு துறை தலைவர்களுடன் அவசரக்கால கூட்டம், இயக்குனர் வீர் சிங் நேகி தலைமையில் நடந்தது.

கூட்டத்தில் இயக்குனர் வீர் சிங் நேகி கூறுகையில், 'எல்லையில் நிலைமை மேலும் மோசமடைந்து பெரிய அளவிலான தாக்குதல்கள் நடந்தால், மருத்துவம், அறுவை சிகிச்சை, அவசர மருத்துவம், மயக்க மருந்து, குழந்தை மருத்துவம், மகப்பேரியல் மற்றும் மகளிர் மருத்துவம் உள்ளிட்ட உயர் மருத்துவ குழு அமைக்கப்பட்டிருக்கிறது. தேவைப்படும் நேரத்தில் இவர்கள், ஜம்மு காஷ்மீர், ராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய மாநில எல்லைகளில் உள்ள மருத்துவமனைகளுக்கு இந்திய அரசாங்கத்தால் அனுப்பப்படலாம். புதுச்சேரியில் கடல் வழித் தாக்குதல் ஏற்பட்டால், ஜிப்மரின் பேரிடர் குழு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இது பல்வேறு மருத்துவ பிரிவுகளை கொண்ட அவசரகால குழுவினரால் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்திய அரசின் அறிவுறுத்தலின் பேரில், ஜிப்மர் மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களின் அனைத்து விடுமுறையும் ரத்து செய்யப்பட்டுள்ளது. அவசரகால சூழலில் ஜிப்மரில் மருத்துவ மற்றும் துணை மருத்துவ ஊழியர்கள் இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் அறிவுறுத்தலின் படி, இந்தியாவில் எங்கும் பணியமர்த்தப்படுவர். தயார் நிலையில் இருக்க வேண்டும் என, தெரிவித்துள்ளார்.

தினகரன்
மே 10, 2025 சனிக்கிழமை

## விடுமுறை அறிவிப்புகள் ரத்து

# ஜிப்மரில் அனைத்து ஊழியர்களும் உடனே பணிக்கு திரும்ப உத்தரவு

**புதுச்சேரி, மே 10:** நாட்டில் தற்போது நிலவி வரும் போர் பதற்றம் காரணமாக புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்ட பொது விடுமுறை மற்றும் கோடை விடுமுறைகள் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும், மறு உத்தரவு வரும் வரை ஊழியர்கள் விடுமுறை எடுக்கக்கூடாது என்றும், அனைத்து ஊழியர்களும் வரும் 13ம் தேதிக்குள் பணிக்கு திரும்ப வேண்டும் என்றும் அதிரடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் உள்ள அனைத்து துறைகளுக்கும் மூத்த நிர்வாக அதிகாரி ஹாவா சிங் பிறப்பித்துள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது:

தற்போது நிலவும் மோதல்கள் காரணமாக உருவாகி வரும் தேசிய பாதுகாப்பு கவலைகளை கருத்தில் கொண்டும், ஜிப்மரில் தயார் நிலை மற்றும் அத்தியாவசிய சேவைகளின் தொடர்ச்சியின் அவசியத்தை கருத்தில் கொண்டும் பின்வரும் உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகிறது. அதன்படி, கடுமையான மருத்துவ அல்லது அவசர சூழ்நிலைகளை தவிர, மறு உத்தரவு வரும் வரை எந்த விடுப்பும் அனுமதிக்கப்படாது. முன்னர் அறிவிக்கப்பட்ட அனைத்து விடுமுறைகளும் உடனடியாக ரத்து செய்யப்படுகின்றன. அனைத்து ஊழியர்களும் உடனடியாக பணிக்கு திரும்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். பணியில் இருந்து வெளியே இருக்கும் ஊழியர்கள் மே 13ம் தேதிக்குள் பணிக்கு திரும்ப வேண்டும்.

கோடை விடுமுறையின் முதல் பாதி உடனடியாக அமலுக்கு வரும் வகையில் குறைக்கப்படுகிறது. மேலும் அனைத்து மருத்துவ பேராசிரியர்கள் வரும் 13ம் தேதி அல்லது அதற்கு முன் பணிக்கு திரும்ப வேண்டும். 17ம் தேதி தொடங்க திட்டமிடப்பட்ட கோடை விடுமுறையின் 2ம் பாதி ரத்து செய்யப்படுகிறது. தற்போதைய அவசர நிலையின் போது முழுமையான செயல்பாட்டு தயார் நிலை மற்றும் தடையற்ற சேவை வழங்கலை உறுதி செய்வதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வழிமுறைகளை பின்பற்றாது தீவிரமாக கருதப்பட்டு பொருந்தக்கூடிய விதிகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் அறிவுறுத்தல்படி, தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு தேசிய முயற்சிகளை ஆதரிக்க ஜிப்மர் மருத்துவமனையின் அனைத்து மருத்துவ மற்றும் துணை மருத்துவ ஊழியர்களும் இந்தியாவில் எங்கும் பணி அமர்த்தப்படுவதற்கு காத்திருப்பு முறையில் இருக்க வேண்டியிருக்கும். அதன்படி, சம்பந்தப்பட்ட அனைத்து ஊழியர்களும் உடனடியாக பணி அமர்த்தலுக்கு தயாராக இருக்கவும், தங்கள் முழு ஒத்துழைப்பை வழங்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்
மே 10, 2025 சனிக்கிழமை

அவசர மற்றும் தேசிய தயார் நிலை

# ஜிப்மர் மருத்துவமனையில் அவசர கூட்டம்

புதுச்சேரி, மே 10: புதுச்சேரி கோரிமேடு ஜிப்மர் மருத்துவமனையில் இயக்குனர் டாக்டர் வீர் சிங் தலைமையில் அவசர நிலை மற்றும் தேசிய தயார் நிலையை கருத்தில் கொண்டு அவசர கூட்டம் நடந்தது. கூட்டத்தில், அவர் கூறியதாவது, எல்லையில் நிலைமை மோசமடைந்து, பெரிய அளவிலான தாக்குதல்கள் நடந்தால், மருத்துவம், அறுவை சிகிச்சை, அவசர மருத்துவம், மயக்க மருந்து, குழந்தை மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவம் உள்ளிட்ட அனைத்து உயர் மருத்துவ குழு தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது. தேவைப்படும் நேரத்தில் அவர்கள் ஜம்மு காஷ்மீர், ராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய மாநில எல்லைகளில் உள்ள மருத்துவமனைகளுக்கு இந்திய அரசாங்கத்தால் அனுப்பப்படலாம். புதுச்சேரியில் கடல் வழித்தாக்குதல் ஏற்பட்டால், ஜிப்மரின் பேரிடர் குழு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இது பல்வேறு மருத்துவ பிரிவுகளை கொண்ட அவசரகால குழுவினரால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்திய அரசின் அறிவுறுத்தலின் பேரில் ஜிப்மரில் மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களின் அனைத்து விடுமுறையும் ரத்து செய்யப்பட்டுள்ளது. அவசர கால சூழலில் ஜிப்மரில் மருத்துவ மற்றும் துணை மருத்துவ ஊழியர்கள், இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் அறிவுறுத்தல்களின்படி இந்தியாவில் எங்கும் பணியமர்த்த பட்சத்தில் தயார் நிலையில் இருக்க வேண்டும். இவ்வாறு கூறினார்.